www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**// மின்னஞ்சல் மூலம் //**

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள், சென்னை – 6.
ந.க.எண். 13845/அ3/இ1/2024, நாள். 07.03.2024

-----

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக்கல்வி – 15.03.2024 நிலவரப்படியான பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவியிலிருந்து முறையான கண்காணிப்பாளராகப் பணிமாறுதல் வழங்குவதற்கு – தகுதி வாய்ந்தோர் பெயர்ப்பட்டியல் – தயார் செய்தல் – விவரங்கள் அனுப்பக் கோருதல் – சார்பு.

-----

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் பணிபுரியும் அமைச்சுப்பணியாளர்களில் 15.03.2024 நிலவரப்படி பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவியிலிருந்து முறையான கண்காணிப்பாளராகப் பணிமாறுதல் வழங்குவதற்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, கீழ்க்கண்டவாறு கருத்துருக்கள் கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவியிலிருந்து முறையான கண்காணிப்பாளர் பணிமாறுதல் | 15.03.2019 நிலவரப்படி உதவியாளர் பதவியிலிருந்து பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் தேர்ந்தோர் பட்டியலின் படி பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்தவர்கள் சார்பாக விவரம் அளிக்கப்பட வேண்டும். |

மேற்கண்டவாறு கருத்துரு அனுப்பும்போது கீழ்க்கண்ட விவரங்களை உள்ளடக்கி அனுப்பப்பட வேண்டும்.

1. ஒழுங்கு நடவடிக்கை / தண்டனைக் காலம் (Currency of Punishment Period) முடிந்து 15.03.2024 தேர்ந்தோர் பட்டியலில் இடம்பெறத் தகுதியானவர்களின் விவரங்களை (ஒழுங்கு நடவடிக்கை ஆணை நகல்) முழுமையான வகையில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2. பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவியில் முன்தேதியிட்டு பணிவரன்முறை பெற்றுள்ளவர்கள் 15.03.2024 நிலவரப்படியான கண்காணிப்பாளர் பதவி உயர்வுக்குத் தகுதி இருப்பின் அப்பணியாளர்களது கருத்துருக்களையும் முன்தேதியிட்ட பணிவரன்முறை ஆணை நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

3. முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டவர்களின் சார்பாக அதற்கான ஆணை மற்றும் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் ஆகியவைகளுக்கான ஆதார நகல் இணைக்கப்பட வேண்டும்.

சென்ற ஆண்டு தகுதியிருந்தும் கருத்துரு அனுப்பப்படாமல் காலம் தாழ்த்தியவர்கள் சார்ந்து அனைவரையும் கண்டறிந்து மாவட்டத்தில் எவரது பெயரும் விடுபடாமல் கருத்துரு அனுப்பப்பட வேண்டும்.

**த.பி.பா...,**

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலில் இடம்பெறத் தகுதியுடைய நபர்களது கருத்துருக்களை அனுப்பாமல் இருப்பின் அதற்கு அப்பிரிவினை கையாளும் உதவியாளர் / கண்காணிப்பாளர் மற்றும் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரே முழுபொறுப்பேற்க நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது

மேலும், இச்செயல்முறைகள் கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறும், கருத்துருக்களை பதவி வாரியாக 15.03.2024–க்குள் அனுப்புமாறும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : 1. படிவம் – (1)

(ஒம்)/–த.ராஜேந்திரன்
இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

பெறுநர்

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் (மின் அஞ்சல் மூலமாக)
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (மின் அஞ்சல் மூலமாக)

நகல்:–

1. மாநில திட்ட இயக்குநர் , ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6.
2. உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 6.
3. இயக்குநர்,தொடக்கக்கல்விஇயக்ககம்,சென்னை–6.
4. இயக்குநர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை 6.
5. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை –6
6. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை –6.

(1–6: தங்கள் அலுவலகப் பணியாளர்கள் சார்பான விவரம் அளிக்கும் பொருட்டு பணிந்தனுப்படுகிறது)

7. இவ்வியக்கக அ2 பிரிவிற்கு
8. தகவல் பலகைக்கு

www.Padasalai.Net

படிவம் – 1

**பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவியிலிருந்து முறையான கண்காணிப்பாளர் பணிமாறுதல் கோருவதற்கான படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | பெயர் | : | |
| 2 | தற்போது வகிக்கும் பதவியின் பெயர் | : | |
| 3 | பணிபுரியும் பள்ளி / அலுவலகம் | : | |
| 4 | பிறந்த தேதி | : | |
| 5 | முதன் முதலில் அரசுப் பணியில் சேர்ந்த பதவியின் பெயர் மற்றும் நாள் (நியமன ஆணை நகல் இணைக்கப்படல் வேண்டும்) | | |
| 6 | இளநிலை உதவியாளர் / தட்டச்சர்/ சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை–3 பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் (கருணை அடிப்படையில் நியமனம் பெற்றவர்கள் சார்பாக அரசாணை எண் மற்றும் தேதி குறிப்பிட்டு, (*ஆணை நகல் இணைக்கப்படல் வேண்டும்*) | | |
| | இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்த நாள். | : | |
| 7 | நியமனம் முறை<br>(TNPSC / கருணை / பதவி உயர்வு / வேலைவாய்ப்பு)<br>(நியமன ஆணை நகல் இணைக்கப்படல் வேண்டும்) | | |
| 8 | தர எண் மற்றும் ஆண்டு | | |
| 9 | உதவியாளர் பதவி உயர்வு பெற்ற | | |
| | a) முன்னுரிமை ஆண்டு | | |
| | b) முன்னுரிமை எண் | | |
| | c) உதவியாளர் பதவியில் பணிவரன்முறை நாள் (ஆணை நகல் இணைக்கப்பட வேண்டும்) | | |
| | d) உதவியாளர் பதவியில் தற்காலிக உரிமைவிடல் செய்திருப்பின் அதன் விவரம் (ஆணை நகல் இணைக்கப்பட வேண்டும்) | | |
| | e) உதவியாளர் பதவியில் முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்த நாள் (ஆணை நகல் இணைக்கப்பட வேண்டும்) | | |
| | f) முன்னுரிமை ஆண்டு | | |
| | g) முன்னுரிமை எண் | | |
| 10 | பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற | | |
| | a) முன்னுரிமை ஆண்டு | | |
| | b) முன்னுரிமை எண் | | |
| | c) பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளராகப் பதவியில் பணிவரன்முறை நாள் (ஆணை நகல் இணைக்கப்பட வேண்டும்) | | |

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| | d) பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளராகப் பதவியில் தற்காலிக உரிமைவிடல் செய்திருப்பின் அதன் விவரம் (ஆணை நகல் இணைக்கப்பட வேண்டும்) | | |
| | e) பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளராகப் பதவியில் முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்த நாள் (ஆணை நகல் இணைக்கப்பட வேண்டும்) | | |
| | f) முன்னுரிமை ஆண்டு | | |
| | g) முன்னுரிமை எண் | | |
| 11 | தற்போது பணிபுரியும் அலுவலகத்தில் எந்த தேதி முதல் பணிபுரிகிறார். | : | |
| 12 | அரசாணை எண்.996 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 22.09.1984ன்படி பணி நியமனம் பெற்றவர்கள் சார்பில்<br>அ. முதல் நியமன நாள்<br>ஆ. எந்த துறையில் நியமனம்<br>இ. கல்வித்துறைக்கு வந்த நாள்<br>*(ஆணை நகல் இணைக்கப்படல் வேண்டும்)* | : | |
| 13 | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1 மற்றும்–2 பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் ( பணிவரன்முறை ஆணை நகல் இணைக்கப்படல் வேண்டும்) | : | நிலை – 1<br><br>நிலை – 2 |
| 14 | பிற துறையிலிருந்து வந்தவர்கள் எனில் (சுருக்கெழுத்து தட்டச்சர்)<br>அ. முதல் நியமன நாள்<br>ஆ. எந்த துறையில் நியமனம்<br>இ. கல்வித்துறைக்கு வந்த நாள்<br>*(ஆணை நகல் இணைக்கப்படல் வேண்டும்)* | : | |
| 15 | சுருக்கெழுத்து தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்த நாள்/ஆணை நகல் இணைக்கப்பட வேண்டும். | | |
| 16 | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை –I/ நிலை– II பதவியில் தற்போது பெறும் ஊதியம் /ஊதியத் தொகுப்பு | | |

| 17 | துறை தேர்வுகள் தேர்ச்சி பெற்ற விவரம் | : | தேர்ச்சி விவரம் | | அரசிதழில் வெளியிடப்பட்ட விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | மாதம் | ஆண்டு | எண் | தேதி |
| அ | பள்ளித் துணை ஆய்வர் தேர்வு பாகம் –1 | | | | | |
| ஆ | பள்ளித் துணை ஆய்வர் தேர்வு பாகம்–2 | | | | | |
| இ | பள்ளித் துணை ஆய்வர் தேர்வு பாகம்–3 | | | | | |

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | | | | |
|---|---|---|---|---|
| | ஈ | சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்–1 | | |
| | உ | மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு | | |
| 18 | | துறைத் தேர்வுகள் தேர்ச்சி பெறவில்லையெனில் அது குறித்து விவரம் | : | |
| 19 | | பவானிசாகர் பயிற்சி பெற்ற விவரம் | : | |
| | அ | அணி எண் | | |
| | ஆ | பயிற்சி காலம் | | / / முதல் / / வரை |
| | இ | தேர்ச்சி | | ஆம் / இல்லை |
| | ஈ | மதிப்பெண் | | |
| | உ | தோல்வி பெற்றிருப்பின் மீள தேர்ச்சி பெற்ற விவரம் | : | |
| 20 | | பவானிசாகர் பயிற்சியை தகுதிகாண் பருவக் காலமாகிய இரண்டு ஆண்டுகளுக்குள் முடிக்காமல் தாமதமாக முடித்திருப்பின் அதற்கு அரசின் விதித்தளர்வாணை பெறப்பட்டுள்ளதா? ஆம் எனில் அரசாணை எண். மற்றும் நாள். | : | |
| 21 | | பவானிசாகர் பயிற்சி பெறவில்லையெனில் அது குறித்து விவரம் (ஆணை நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 22 | | கடந்த 5 ஆண்டுகளில் அன்னார் மீது தமிழ்நாடு குடிமுறைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(பி)ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் உள்ளதா? அல்லது தண்டனை ஏதும் அளிக்கப்பட்டுள்ளதா? (ஆம் எனில், அதன் முழு விவரம் பின்வருமாறு பூர்த்தி செய்யப்படவேண்டும்) | : | |
| | அ | ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட செயல்முறைகள் எண் மற்றும் நாள் | : | |
| | ஆ | குற்றசாட்டு குறிப்பாணை சார்பு செய்யப்பட்டுள்ளதா? (ஆணை நகல் இணைக்கப்படல் வேண்டும்) | : | |
| | இ | இறுதியாணை வழங்கப்பட்டதா? (ஆணை நகல் இணைக்கப்படல் வேண்டும்) | : | |
| | ஈ | மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதா? (கடித நகல் இணைக்கப்படல் வேண்டும்) | : | |

www.Padasalai.Net

| | | | | |
|---|---|---|---|---|
| | உ | மேல்முறையீடு மீது இறுதி ஆணை வழங்கப்பட்டுள்ளதா? (ஆணை நகல் இணைக்கப்படல் வேண்டும்) | : | |
| | ஊ | இறுதி ஆணையில் தண்டனை பெற்றுள்ளாரா?அவ்வாறுபெற்றுயிருப்பின் அத்தண்டனை செயல்படுத்தப்பட்டு உள்ளதா?*(செயல்படுத்தியதற்கான பணிப்பதிவேட்டின் பக்க நகல்)* | : | |
| 23 | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சார்பாக நடவடிக்கை ஏதும் நிலுவையில் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம். | | | |
| 24 | பணியாளரின் கையொப்பம் மற்றும் தேதி | | : | |
| 25 | பணியாளரின் பதவி உயர்வு குறித்து சார்நிலை அலுவலரின் தெளிவான பரிந்துரை | | : | |
| 26 | ஓய்வு பெறும் நாள் | | : | |

***மேலே** கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் கணினி மூலம் தட்டச்சு செய்து அனுப்பப்படல் வே**ண்டும்***

மேற்காணும் விவரங்கள் அனைத்தும் பணிப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது.

சார்ந்த அலுவலரின் கையொப்பம்

வருவாய் மாவட்டத்தில் தகுதிவாய்ந்த அனைத்து பணியாளர்களின் பெயர்களும் விடுபடாமல் தொகுத்து அனுப்பப்பட்டுள்ளது, எதிர்வரும் நாட்களில் பணியாளர் பெயர் விடுபட்டது என சேர்க்க வேண்டும் என்று விவரம் தெரிவித்தால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு முழுபொறுப்பு ஏற்றுக் கொள்கிறன் எனச் சான்றளிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலரின்
கையொப்பம்.

www.Padasalai.Net